செ.வெ.எண் -16 நாள்:10.01.2018

**அரியலூர் மாவட்டத்தில் ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு அனுமதி வழங்குதல் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்டத்தில் ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு அனுமதி வழங்குதல் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் **முனைவர்.அபிநவ்குமார், இ.கா.ப.,** அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு விதிமுறைகளின்படி உரிய அனுமதியை மாவட்ட நிர்வாகத்திடம் பெற வேண்டும்.

காளை பிடிக்கும் வீரர்கள், காளைகளின் விபர பட்டியலுடன் மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் பெற வேண்டும்.

**மேலும், ஜல்லிக்கட்டுக்கான அனுமதி விண்ணப்பம் குறித்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,**

ஜல்லிக்கட்டு நடைபெறும் கிராமம், ஜல்லிக்கட்டு நடத்தும் பொறுப்பாளர்களின் விவரம் முழு முகவரியுடன், ஜல்லிக்கட்டு போட்டியில் பங்குபெறும் காளைகளின் எண்ணிக்கை, ஜல்லிக்கட்டு போட்டியில் பங்குபெறும் மாடுபிடி வீரர்களின் எண்ணிக்கை, ஜல்லிக்கட்டு விழாவில் பங்குபெறும் தன்னார்வலர்களின் எண்ணிக்கை மற்றும் முகவரி, ஜல்லிக்கட்டு நடைபெறும் இடத்தின் முழு விளக்க வரைபடம் இணைக்கப்பட வேண்டும்.

போட்டி திறந்த வெளி மைதானத்தில் நடைபெற வேண்டும், போட்டிக்கு முன் காளைகள் காத்திருக்கும் இடத்தில் ஒரு காளைக்கு 60 சதுர அடி என்ற வீதத்தில் போதிய இடவசதி இருத்தல் வேண்டும், பார்வையாளர்கள் அமரும் இடம் உரிய அரசு விதிகளின்படி அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

போட்டிக்கு முன் காளைகள் காத்திருக்கும் இடத்தில் போதுமான நிழல் வசதி (சாமியானா, Roof வசதி), தண்ணீர் மற்றும் தீவன வசதி செய்யப்பட்டிருக்க வேண்டும், காளைகளை மருத்துவப்பரிசோதனை செய்ய போதுமான இடவசதி மற்றும் தடுப்பு வேலி அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

காளைகள் ஓடும் இடம் 15 சதுர மீட்டர் தேங்காய் நார் மற்றும் இரண்டடுக்கு வேலிகள் அமைக்கப்பட்டு பாதுகாப்பு செய்யப்பட்டிருக்க வேண்டும், காளைகள் சேகரிக்கும் இடம் 60 சதுர அடியில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

அரியலூர் மாவட்டத்தில் ஜல்லிக்கட்டு நடத்த விரும்பும் கிராமப் பொதுமக்கள் ஜல்லிக்கட்டு நடத்த உத்தேசித்துள்ள 15 நாட்களுக்கு முன்னதாக, அரசாணை எண்.7, கால்நடைப்பராமரிப்பு, பால்வளம் (ம) மீன்வளத்(க.ப.3)துறை, நாள்-21.01.2017 மற்றும் தமிழ்நாடு விலங்குவதை தடுப்பு (ஜல்லிக்கட்டு நடத்தும்) விதிகள் 2017-ல் கொடுக்கப்பட்டுள்ள விதிகளுக்கு உட்பட்டு விண்ணப்ப படிவத்தில் எவ்வித விடுபாடுகளுமின்றி பூர்த்தி செய்து அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் சமர்ப்பித்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஜல்லிக்கட்டு விண்ணப்பப்படிவங்களை கால்நடைப்பராமரிப்புத்துறை, மண்டல இணை இயக்குநர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அரியலூர் என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும்,ஜல்லிக்கட்டு அனுமதி விண்ணப்ப படிவம் மற்றம் அரசு விதிமுறைகளின் விவரங்களை www.ariyalur.tn.nic.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து, விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சே.தனசேகரன், மண்டல இணை இயக்குநர் கால்நடைப்பராமரிப்புத்துறை மரு.எம்.நஸீர், கோட்டாட்சியர்கள் மு.மோகனராஜன் (அரியலூர்), ப.டினாகுமாரி (உடையார்பாளையம்), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ஜே.சுரேஷ்குமார், அரியலூர் வட்டாட்சியர் சு.முத்துலெட்சுமி மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.